மேலும் இவர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் பயிற்சி நிலையத்தினால் நடத்தப்படும் அரசு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு இத்தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

செயற்பொறியாளர் பொ.ப.து.,
கட்டட கட்டுமான கோட்டம் - I
சேப்பாக்கம், சென்னை-5.

17/11/21

**பெறுநர்:** திரு. நா. கார்த்திக்,
இளநிலை உதவியாளர்,
இக்கோட்ட அலுவலகம்.

செயற்பொறியாளர் அலுவலகம், பொ.ப.து., கட்டட கட்டுமான கோட்டம் எண்.1, சேப்பாக்கம், சென்னை 5. அவர்களின் செயல்முறை ஆணை

முன்னிலை:- பொறி. S. முத்தமிழ் அரசு, பி. இ.,
செயற்பொறியாளர், பொ.ப.து.,

செ.மு.ஆ.எண். EC 1(a) / 540 / 2021 / நாள்.17 .11. 2021

பொருள்: பணியமைப்பு - த.நா.அ.ப. தொகுதி திரு. நா. கார்த்திக், பதிவுரு எழுத்தர் பதவி மாற்றம் (By Transfer) வாயிலாக இளநிலை உதவியாளர் பணிநியமனம் பணிவரன்முறை மற்றும் தகுதி காண் பருவம் துவக்கி ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து., சென்னை-5. அவர்களின் செ. ஆ. எண். எஸ் 3(3) / 41882 / 2020 / நாள்: 17.02.2021.
2. முதன்மைத் தலைமைப் பொறியாளர், (கட்டடம்) (ம) தலைமைப் பொறியாளர் (கட்டடம்) சென்னை மண்டலம், பொ.ப.து., சேப்பாக்கம் சென்னை-5 அவர்களின் செ ஆ. எண். நி 3(3) / 002775 / 2021 / நாள்: 23.02.2021.
3. கண்காணிப்பு பொறியாளர். பொ.ப.து., கட்டடம் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம்,சேப்பாக்கம், சென்னை-5. அவர்களின் செ ஆ. எண். நி 2 /3237 / 2020 / நாள்: 24.02.2021.
4. இவ்வலுவலக செ.மு.ஆ. எண் : க3 / 101 / 2021 நாள்: 23.02.2021.

......

பார்வையில் காணும் செயல்முறை ஆணைகளை தொடர்ந்து பதவி மாற்றம் (By Transfer) வாயிலாக பதிவுரு எழுத்தர் பதவியிலிருந்து இளநிலை உதவியாளராக இவ்வலுவலகத்திற்கு பணியமர்வு செய்யப்பட்ட திரு. நா. கார்த்திக் அவர்களின் பணியினை இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 24.02.2021 முற்பகல் முதல் பணிவரன்முறைபடுத்தி ஆணை வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணியாளர் விதி பொது விதி 23 (அ) (i) ன் படி இவர் இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 24.02.2021 முற்பகல் முதல் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார்

அன்னார் இரண்டாண்டு தகுதிகாண் பருவ காலத்தை மூன்று ஆண்டு தொடர் பணியில் முடிக்க வேண்டும் என அறிவுருத்தப்படுகிறார்.

...2...